செ.வெ.எண். 64 நாள்.27.11.2017.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்
6 சட்டம் பயின்ற பட்டாதாரிகளுக்கு அலுவலகம் வைத்து தொழில் செய்வதற்கு
ரூ.3.00 இலட்சம் மதிப்பில் நிதியினையும், 17 பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டத்தின்
கீழ் மாதந்திர உதவித் தொகை வழங்குவதற்கான உத்தரவினையும் மாவட்ட வருவாய்
அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் இன்று (27.11.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் 6 சட்டம் பயின்ற பட்டாதாரிகளுக்கு அலுவலகம் வைத்து தொழில் செய்வதற்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.3.00 இலட்சம் மதிப்பிலான காசோலைகளையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 13 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை வழங்குவதற்கான உத்தரவினையும், 4 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்குவதற்கான உத்தரவினையும் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்ள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், நதி நீர் இணைப்பு தனித்துணை ஆட்சியர் திரு.மகேஸ்வரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.நிர்மலா உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.